<u>சுருக்கம்</u>

விருதுகள் – சுகாதாரத்துறையில் ஆண்டுதோறும் சிறந்த சேவை புரிந்த மருத்துவர்களுக்கு விருது வழங்குதல் – சிறந்த மருத்துவர் விருது – 2014 – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏடி2) துறை</u>

அரசாணை (ப) எண்.878 நாள்: 02.07.2015

திருவள்ளுவராண்டு 2046
மன்மத, ஆனி 17

<u>படிக்கப்பட்டது:</u>

1. அரசாணை (நிலை) எண் 153, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள்: 24.4.2012.
2. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரின் க. எண்.48287/நிபி7/2/2011, நாள்: 03.06.2015 மற்றும் 09.06.2015

••••••

<u>ஆணை.</u>

ஒவ்வொரு ஆண்டும் மருத்துவர் தினமான ஜூலை 1–ல் சிறந்த மருத்துவ சேவை புரிந்த மருத்துவர்களுக்கு விருது வழங்குவதற்கு பார்வை 1ல் கண்டுள்ள அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் அவ்வரசாணையில் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககத்தை சேர்ந்த 2 மருத்துவர்கள், மருத்துவக்கல்வி இயக்ககத்தை சேர்ந்த 2 மருத்துவர்கள், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்ககத்தை சேர்ந்த 2 மருத்துவர்கள், இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதித்துறையினைச் சேர்ந்த 1 மருத்துவர் மற்றும் தனியார் மருத்துவமனையைச் சேர்ந்த 3 மருத்துவர்கள் ஆகமொத்தம் 10 மருத்துவர்களுக்கு சிறந்த மருத்துவர்களுக்கான விருது வழங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆயினும் மருத்துவத்துறை சிறந்த சேவை புரிந்த சில மருத்துவர்களை ஊக்குவிக்கும் வண்ணம் இந்த ஆண்டு முதல் மேலும் சிலருக்கு இந்த விருதுகளை வழங்குவது என கூட்டத்தின்போது முடிவெடுக்கப்பட்டது. அந்த அடிப்படையில் மருத்துவக் கல்வி இயக்குநரகப் பிரிவில் மேலும் ஒரு மருத்துவருக்கும் தனியார் மருத்துவமனையைச் சேர்ந்த ஒரு மருத்துவருக்குமாக இரண்டு மருத்துவர்களுக்கு கூடுதலாக இவ்விருதினை வழங்கக் கருதி, மொத்தம் 12 மருத்துவர்களுக்கு 2014ம் ஆண்டுக்கான சிறந்த மருத்துவருக்கான விருதை வழங்கலாமென அரசு கருதுகிறது. இவ்விருதுகளுக்கு தேர்தெடுக்கப்பட்டவர்கள் ஒவ்வொருவருக்கும் தங்கமுலாம் பூசிய தாமிரபதக்கத்துடன் ரொக்கத்தொகையும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும்.

2. சிறந்த மருத்துவ சேவை புரிந்தமைக்கான சிறந்த மருத்துவர்களுக்கான 2014–ஆம் ஆண்டு விருதுகளுக்கான விண்ணப்பங்கள் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குர், மருத்துவக்கல்வி இயக்குர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர், இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதித்துறை இயக்குநர் ஆகியவர்களிடமிருந்தும் மற்றும் தனியார் மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவர்களிடமிருந்தும் பெறப்பட்டது. இந்த விண்ணப்பங்கள் மாநில அளவிலான தேர்வுக்குழுவின் முன் பரிசீலனைக்கு வைக்கப்பட்டது. தேர்வுக்குழு விண்ணப்பங்களை கூர்ந்தாய்வு செய்து 2014–ஆம் ஆண்டிற்கான சிறந்த மருத்துவர்களுக்கான விருதுகளைப் பெறுவதற்கு 12 மருத்துவர்களை தேர்வு செய்து, அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

..2.

| வ எண். | துறை | | மருத்துவர்களின் பெயர்ப் பட்டியல் |
|---|---|---|---|
| 1. | பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்ககம் | 1. | மருத்துவர் எஸ். எஸ். வேலன், MBBS., DNP MBA., மேற்பார்வை மருத்துவ அலுவலர், கோயம்புத்தூர் |
| | | 2. | மருத்துவர் வி. எஸ். கோபாலகிருஷ்ணன், MBBS., உதவி மருத்துவர், அரசு ஆரம்ப சுகாதார நிலையம், புன்னை. |
| 2. | மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம் | 1. | மருத்துவர் ஆர். ரமேஷ், M.S., DNB(G.S.) உதவி மருத்துவர், மேட்டூர் அரசு மருத்துவமனை, சேலம். |
| | | 2. | மருத்துவர் டி. கமலக்கண்ணன், MBBS., DCH., உதவி மருத்துவர், பச்சிளங்குழந்தைகள் தீவிர சிகிச்சைப் பிரிவு, அரசு தலைமை மருத்துவமனை, பெரம்பலூர். |
| 3. | மருத்துவக்கல்வி இயக்ககம் | 1. | பேராசிரியர் ஆர். ராஜாராமன், MS MCh(Surgical Oncology) துறைத் தலைவர், புற்றுநோய் அறுவை சிகிச்சை துறை, அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை. |
| | | 2. | பேராசிரியர் ஈ. தேரணிராஜன், MD., DCH., MRTPCH(U.K.) துறைத் தலைவர், அரசு வேலூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, வேலூர். |
| | | 3. | பேராசிரியர் எஸ்.எம். சந்திரமோகன், MB., MS., M.Ch FAIS., FACS., FIMSA., ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை, சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை |
| 4. | இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதித் துறை | 1. | மருத்துவர் எம். பிச்சை குமார், MD(s), உதவி பேராசிரியர், அரசு சித்த மருத்துவக் கல்லூரி, அரும்பாக்கம். |
| 5. | தனியார் துறை மருத்துவர்கள் | 1. | மருத்துவர் எஸ். ஞானசௌந்தரி, MBBS., DGO., F.S.A.M.S., இந்திய மருத்துவ நிலையம், கன்னியாகுமரி. |
| | | 2. | மருத்துவர் எல்.ப்பி. தங்கவேலு, M.S., D.Sc., FICS., FAIS., FIAGES., தலைவர் மற்றும் நிர்வாக அறங்காவலர் |
| | | 3. | மருத்துவர் சி. பழனிவேலு, MS MCh(Gastro) இயக்குநர், ஜெம் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர். |
| | | 4. | மருத்துவர் வி. வரதராஜன், M.S., FICS., FIAMS., FAIS., மூத்த அறுவை சிகிச்சை ஆலோசகர், தஞ்சாவூர். |

3. மாநில தேர்வுக்குழு (State Level Selection Committee) தேர்வு செய்துள்ள மேற்கண்ட 12 மருத்துவர்களுக்கும் 2014–ம் ஆண்டிற்கான சிறந்த மருத்துவருக்கான விருதுகளை வழங்கலாமென அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ. ராதாகிருஷ்ணன்
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம், சென்னை–6.
இயக்குநர், மருத்துவக் கல்வி இயக்ககம், சென்னை–10.
இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை, சென்னை–6.
இயக்குநர், குடும்பநலம், சென்னை–6.
இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம், (தொ.அ. ஈ) சென்னை–6.
முதன்மைச் செயலர் / ஆணையர்
இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை, சென்னை–106
குழும இயக்குநர், மாநில ஊரக நலக் குழுமம், சென்னை–6
திட்ட இயக்குநர், தமிழ்நாடு சுகாதாரத் திட்டம், சென்னை–6.
திட்ட இயக்குநர், மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் (பொறுப்பு), சென்னை–8.
நகல்:
மாண்புமிகு அமைச்சர் மக்கள் நல்வாழ்வு அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
பொதுத்துறை, சென்னை–9.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (டேட்டா செல்), சென்னை–9.
இருப்பு கோப்பு / சுத்த நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.